மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி
**முன்னிலை: திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், பழனி.**
2026 ம் வருடம் மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை
**சி.ஆர்.எல்.எம்.பி.எண். 218/2026**

சக்திவேல் வயது 40/26,
த/பெ.பெருமாள்,
க.எண்.227, தெற்குத்தெரு,
பெருமாள்கோவில்தெரு,
பாப்பம்பட்டி,
பழனி தாலுகா.

... மனுதாரர் / எதிரி

எதிராக

சார்பு ஆய்வாளர்,
பழனி தாலுகா காவல் நிலையம்,
குற்ற எண். 118/2026
சட்டப்பிரிவுகள் 4 TNPHW Act, 296(b),324(5),351(3) BNS.

... எதிர்மனுதாரர் / புகார்தாரர்

எதிரி காவல்படுத்தப்பட்ட நாள் 07.03.2026.

நீதிமன்ற காவலில் உள்ள எதிரியை பிணையில் விடுவிக்கக்கோரி எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.விஸ்வபாரதி அவர்கள் பிரிவு 480 BNSS ன்படி இப்பிணை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

இப்பிணை மனு இன்று என் முன்னர் விசாரணைக்கு வந்த போது, எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 திரு.ப.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.விஸ்வபாரதி அவர்கள் ஆஜராகி வாதிட்டதைக் கேட்டறிந்தும், வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை என்னுடைய பரிசீலனையிலிருந்தும் வந்த இந்த மனுக்களில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

1) மனுதாரர்/ எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் பிரிவுகள் 4 TNPHW Act, 296(b),324(5),351(3) BNS ன் படியான குற்றமாகும்.

2) மனுதாரர் / எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் அவர் தரப்பு வாதத்தில் எதிரி கடந்த 07.03.2026 ம் தேதி கைது செய்து செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும், இந்த மனுதாரர் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு எதிராக மற்றொரு தரப்பு புகார்

கொடுத்து எதிர் எதிர் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும், அந்த எதிர் தரப்பினர் மனுதாரரர் வைத்திருந்த கேமராவை உடைத்த பிறகு மனுதாரர் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், காவல்துறை ஆய்வாளர் மீதும், உயர் அதிகாரிகளுக்கு மனு அனுப்பியதால் விரோதம் கொண்டு மனுதாரரை கைது செய்துள்ளார்கள் என்று வாதிடப்பட்டது.

3)அரசு தரப்பில் தரப்பட்டுள்ள பதிலில் எதிரி கடந்த 07.03.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், பழனி தாலுகா காவல் நிலைய கு.எண்.509/25 பிரிவுகள் 296(b),115(2),118(1),351(2) BNS ன் வழக்கில் சம்பிரதாய கைது செய்யவேண்டி உள்ளது எனவும், எதிரியை பிணையில் விட்டால் வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு காலதாமதமாகக்கூடும் என்பதாலும், எதிரி வாதியிடம் சென்று மீண்டும் பிரச்சனை செய்யக்கூடும் என்பதாலும், எதிரி வெளியூர் வெளிமாநிலம் சென்று தலைமறைவாகக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4)இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலினை செய்யப்பட்டது. எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது பிரிவுகள் 4 TNPHW Act, 296(b),324(5),351(3) BNS ன்படியான குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண் மேற்சொன்ன எதிர் எதிர் வழக்குகளில் உள்ள நபர் என்று எந்த ஆவணமும் முன் வைக்கப்படவில்லை மற்றும் இந்த பாதிக்கப்பட்ட நபர் பெண்ணாக இருந்து அவரை மனுதாரர் வன்கொடுமை செய்துள்ளதால் வழக்கின் இச்சூழலில் எதிரியை பிணையில் விடுவிக்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

5) இறுதியாக இப்பிணை மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.13 17:58:55 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.